தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1977 ஜூலை 13.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வினாக்கள் ஒன்றும் இல்லை.

1. அவை உரிமை மீறல் குறித்த பிரச்னைகள்.

(அ) 'மெயில்' நாளேட்டில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற விதி 184-ன் கீழ் திரு. லத்தீப் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார். கடந்த 4—7—1977 அன்று பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது பேசிய பேச்சை திரித்துக் கூறியும், பொது மக்களும், தொகுதி மக்களும் தன்னைப் பற்றி தவறாகப் புரிந்து கொள்ளும் வகையில் மேற்கொண்டு இந்த அவையில் அவரது பணியினை செவ்வனே செய்வதற்குத் தயக்கம் ஏற்படும் வகையில் 7—7—1977 அன்று வெளியான 'மெயில்' பத்திரிக்கை தலையங்கம் எழுதியிருப்பதின் வாயிலாக மன்ற உறுப்பினர் என்ற முறையில் தன்னுடைய உரிமையில் தலையிட்டிருப்பதாகவும், எனவே அந்தப் பத்திரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து, இது எந்த முறையில் உரிமை மீறலாகும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, 4—7—1977 அன்று பேரவைத் தலைவர் தேர்தல் ஒருமனதாக நடைபெற்றதைத் தொடர்ந்து மற்றக் கட்சித் தலைவர்களும் நானும் . . . .

1977 ஜூலை 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினையின் அடிப் படைக்குப் போகாமல், இது எப்படி அவை உரிமை மீறிய செயல் என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: தங்களைப் பற்றிப் பேசும்போது எனக்கு, கட்சியின் சார்பாக ஒருவனாக இருக்கின்ற எனக்கு, நியாயமான முறையில் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு கருத்தைச் சொன்னேன். சிறுபான்மைச் சமுதாயத்தின் சார்பாக நான் ஒருவன் வந்திருக்கிறேன் என்று சொன்னேனே தவிர, சிறுபான்மைச் சமுதாயத்திற்காக நான் வந்திருக்கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால், 'மெயில்' பத்திரிகை தன்னுடைய தலையங்கத்தில், எல்லோருடைய வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்று வந்த பிறகு "முஸ்லீம் சமுதாயத்திற்கு மட்டும் பிரதிநிதியாக நான் வந்திருக்கிறேன்" என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்பதை மட்டும் கூட சொல்லாமல், ஏதோ, கடந்த கால—நாற்பது ஆண்டுக் கால முஸ்லீம் வரலாற்றைச் சொல்லி, பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் எப்படி இந்த நாட்டு மக்கள் பிரிக்கப்பெற்று, இந்த நாட்டிலே ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு அவர்கள் ஒரு நடைமுறையைக் கடை பிடித்தார்களோ, அந்த நடைமுறையின் அடிப்படையில் உருவாகிய ஒரு மக்கள் சாராருடைய கடைசி உறுப்பினராக லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள்,
'He must be made to understand' என்று சொல்வதற்குப் பதிலாக, 'He must be helped to understand' என்று சொல்லி என்னுடைய தொகுதி மக்களும், இந்த மாநிலத்தில் இருக்கின்ற மற்ற மக்களும் நான் ஏதோ ஒரு சாராருக்காக வாதாடி வந்திருப்பதாகவும், அதுவும், தேர்தலில் மற்றவர் களுடைய வாக்குகளையும் வாங்கி, முறை மீறிப் பேசியதாகவும் ஒரு கற்பனையான ஒன்றைச் சொல்வதின் வாயிலாக என்னுடைய தொகுதி மக்களிடையேயும் தமிழ்நாட்டு மக்களிடையேயும் ஒரு தவறான கருத்தை என்னைப் பற்றியும், என்னுடைய கட்சியைப் பற்றியும், அதுவும், பிரிவினைக்கு முன்னால் நாட்டில் நிலவிய நிலைமைகளோடு எங்களை ஒப்பிட்டு, ஒரு கற்பனையான வாதத்தை வெளியிட்டதன் மூலம் என்னுடைய உரிமையைப் பாதிக்கும் வகையில், அதுவும் குறிப்பாக ஒரு உறுப்பினர் என்ற முறையில்,

1977 ஜூலை 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

நான் மேற்கொண்டு சுதந்திரமாக, பயமின்றி, தயக்கமின்றி பணியாற்றுவதற்குத் தடங்கல் ஏற்படுத்தும் வகையிலே, 'மெயில்' பத்திரிக்கை வேண்டுமென்றே உள்நோக்கம் கொண்டு இதை எழுதியிருப்பதாக நான் கருதுகிறேன். இது, நிச்சயமாக, அவையின் உரிமையை, குறிப்பாக, உறுப்பினர் என்ற முறையில், நான் பணியாற்ற வேண்டிய உரிமையை மீறியதாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தினல் இதை உரிமைப் பிரச்னையாக இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

பத்திரிக்கைகள், "ஃபேர் காமென்ட்" என்று சொல்வார்களே, அந்த அடிப்படையில் இங்கே 'காமென்ட்' செய்ய உரிமை படைத்தவர்கள். அதை என்றும் நான் ஒப்புக்கொள்கிறேன். பத்திரிக்கைகளுக்கு அதற்கு சுதந்திரம் இருக்கிறது. அதற்கு பதிலாக, உள்நோக்கம் கொண்டு எழுதுவது என்று சொன்னல், கற்பனை செய்து கொண்டு எழுதுவது என்று சொன்னல் அதன் வாயிலாக உறுப்பினருடைய உரிமையை மீறியதாக ஆகும். அவர்களுடைய சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய முறையில் எழுதுவது, பொதுமக்களிடையேயும் உறுப்பினருடைய தொகுதியிலே இருக்கின்ற மக்களிடையேயும் தவறான கருத்து ஏற்படும் வகையில் எழுதுவது malicious and motivated. என்ற பார்டருக்கு உட்பட்டு வரும் வகையில் தன்னுடைய கற்பனையான கருத்தை எழுதுவது, பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கும், பத்திரிக்கா-தர்மத்திற்கும் உட்பட்டு வராது என்ற காரணத்தினல் இதை உரிமைப் பிரச்சினையாக்கி அவை முன் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, இதை உரிமைக் குழுவிற்கு, பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி நியாயம் வழங்க வேண்டுமென்று தங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன்.

(ஆ) 'முரசொலி' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் முரசொலிப் பத்திரிக்கையின் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்துள்ளார். இந்த அவையில் 9—7—1977 அன்று மாண்புமிகு முதல்வரவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை விட்டுவிட்டுப்